1986 நவம்பர் 17]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்சாரம் சம்பந்தமான பட்ஜெட் வரும்போது இது பற்றிய விவரத்தைத் தருகிறேன்.

அமராவதியில் எரிசாராய ஆலை ஏற்படுத்தும் திட்டம்.

37—(*வினா எண். 9552) திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கழிவுப் பாகை பயன்படுத்தி ''எரிசாராய ஆலை'' ஒன்று ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளரிடம் விண்ணப்பம் ஏதும் செய்யப்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் : சபாநாயகர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று இயங்கிக்கொண்டு வருகிறது. இதுவரை 6 கோடி ரூபாய் நஷ்டத்தில் ஓடியது. இப்போது லாபத்தில் ஓடக்கூடிய ஒரு நிலையில் இருப்பதால் இனிமேலாவது அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒரு எரிசாராய ஆலையை அதனை ஒட்டி ஆரம்பித்து அதில் வரும் லாபத்தை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமாய் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் மூன்று, பெரியார் மாவட்டத்தில் இரண்டு, திருச்சி மாவட்டத்தில் ஒன்று, செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒன்று, தருமபுரி மாவட்டத்தில் ஒன்று என்று எட்டு வடிசாராயம் காய்ச்சும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இத்தகைய வடி சாராயம் காய்ச்சும் தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்றால் தனியாக மனு செய்ய வேண்டும். அதன்மீது மதுவிலக்கு ஆணையர் அவர்கள் முடிவு செய்கிறார்கள். இது குறித்து மதுவிலக்கு ஆணையரைக் கேட்டபோது வடி சாராய ஆலைகள் தொடங்குவதற்காக யாரும் மனு கொடுக்கவில்லை என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள்.

திரு. பெ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே மிகவும் லாபம் வருகிற தொழிற்சாலை எரிசாராயம் வடிக்கும் தொழிற்சாலை. இந்தத் தொழிற்சாலைகள் முழுவதும் தனியார் துறையில்தான் தற்போது இருக்கின்றன. ஒன்றுகூட கூட்டுறவுத் துறையிலோ அல்லது பொதுத்துறையிலோ இல்லை. தமிழகத்தில் 13 சர்க்கரை ஆலைகள்

கூட்டுறவுத் துறையில் செயல்படுகின்றன. அதைப்போலவே பல பொதுத்துறையிலும் செயல்படுகின்றன. கூட்டுறவுத் துறையில் செயல்படும் சேலத்தை அடுத்த மோகனூர் சர்க்கரை ஆலையும் மற்றும் பொதுத்துறையில் பெரம்பலூர் சர்க்கரை தொழிற்சாலையும் இத்தகைய ''எரி சாராயத் தொழிற்சாலையை'' அமைக்க இரண்டு விண்ணப்பங்களைப் போட்டு மத்திய அரசின் ''லெட்டர் ஆப் இன்டென்ட்'' கூட வந்துவிட்டும் தமிழக அரசின் அனுமதி கிடைக்காமல் காலதாமதமாவது அரசுக்குத் தெரியுமா? காலதாமதத்தைத் தவிர்த்து இரண்டு ஆலைகளையும் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு அத்தகைய கோரிக்கைபற்றி மனு எதுவும் வந்து அது அனுமதிக்கப்படுவதில் கால தாமதம் எதுவும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அரசே இத்தகைய எரி சாராய வடி சாலையைத் துவக்குகிற நோக்கம் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்,

1985-86-ல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இலாபம்

38—(*வினா எண். 10304) **திரு மா. மணிமாறன் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 1985—86-ல் பெற்ற இலாபம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கை முடிக்கப்படாத கணக்குகளின் படி, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 1985-86-இல் சுமார் எழுபத்தைந்து லட்சம் ரூபாய் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

திரு. மா. மணிமாறன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசாங்கம் சாராயக் கடைகளை ஏலம் விட்டதில் கிடைத்த லாபம் எவ்வளவு? 1985—86 ஆம் ஆண்டில் தமிழக அரசே சாராயக் கடைகளை நடத்தியதால் ஏற்பட்ட லாபம் எவ்வளவு? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது இரண்டுக்கும் ஏற்பட்ட வித்தியாசம் தானா அது? அப்படியென்றால் 1984—85 ஆம் ஆண்டில் எவ்வளவு லாபம் கிடைத்தது, 1985—86 ஆம் ஆண்டில் எவ்வளவு லாபம் கிடைத்தது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டில் லாபம் இல்லை. ஆனால் 1985-86 ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தின் மூலமாகச் சம்பாதிக்கப்பட்ட லாபத்தில் சாராயத்தின் மீது கூடுதல் விற்பனை